**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>**

**<u>அ.வ.எண்.118/2018</u>**

2026–ம் வருடம் பிப்ரவரி திங்கள் 07–ம் நாளன்று 70 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.62–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | **:** | **சிவம்** | **தொழில்** | **:** | |
| **த/பெ.** | **:** | | **வட்டம்** | **:** | |
| **முகவரி** | **:** | | **மதம்** | **:** | |
| **ஜாதி** | **:** | | **வயது** | **:** | |

**<u>முதல் விசாரணை</u>:–**

நான் இவ்வழக்கில் 70 வது பிரதிவாதி ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 70 வது பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.318 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 18.11.2008 ஆம் தேதிய 70 வது பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் எண்.7081/2008 பி.வா.சா.ஆ.319 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 05.02.2026 ஆம் தேதிய 70 வது பிரதிவாதி பெயரிலான வில்லங்க சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.320 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**ஆவணம் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது.**) கடந்த 05.02.2026 ஆம்

தேதிய 70வது பிரதிவாதி பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.321 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>1 முதல் 4, 6 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 63, 64, 65, 67, 68, 69, 70 முதல் 76, 78 முதல் 85, 87 முதல் 100, 102, 104 முதல் 105, 106, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

இல்லை.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது அரியலூர் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் கரூர் மாவட்டம். நான் குடியிருக்கம் அரியலூரிலிருந்து இருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 170 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நான் வழக்கறிஞராக வேலை பார்த்து வருகிறேன். நீங்கள் இந்த வழக்கில் மற்ற பிரதிவாதிகளுக்காக ஆஜராகியுள்ளீர்கள் என்று சொன்னால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். நீங்கள் இந்த வழக்கில் 21ஆம் பிரதிவாதி அப்பாவை உங்களுக்கு தெரியுமா என்றால் தற்போது என்னால் பதில் சொல்ல இயலாது. இந்த வழக்கில் நீங்கள் வாதியை குறுக்கு விசராணை செய்துள்ளீர்களா என்று சொன்னால் நான் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று குறுக்கு விசாரணை செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.319 மூலம் நீங்கள் வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8-ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.319-ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை

இல்லை என்று சொன்னால் சரியல்ல. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்கான ஆவணங்களில் நீங்கள் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தும்பிவாடி கிராமத்தில் எனக்கும், என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. நீங்கள் வாங்கிய பி.வா.சா.ஆ.319 கிரையப்பத்திரம் செல்லாததால் அதன் அடிப்படையில் நீங்கள் வாங்கிய பி.வா.சா.ஆ.321 கூட்டுப்பட்டா செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் நான் இந்த வழக்கில் 70 வது பிரதிவாதி மேலும் நான் தாவா சொத்தை நல்லெண்ணத்தின்பால் வாங்கியுள்ளேன் சட்டப்படி சாட்சியம் அளிப்பது எனது கடமை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.07 18:35:34 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.